විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය     தலைமுறையொன்றின் பெருமிதம்     Pride of a Generation

**ஓய்வூதிய அறிவுறுத்தல்**

මගේ අංකය / எனது இல. / My No. } கடித இல: 07/2022 (III)     ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................     දිනය / திகதி / Date } 2023.06.01

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்,
பிரதேச செயலாளர்கள்.

**ஓய்வூதியர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ்கள் – 2023**

மேற்படி விடயம் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட 2022.12.13 ஆம் திகதிய 07/2022 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் மற்றும் 2022.12.30 ஆம் திகதிய 07/2022(1) ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் ஆகியவற்றின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. உயிர்வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்களுக்கு மட்டுமே இந்த அறிவுறுத்தல்கள் பொருந்தும்.

03. 2023.05.31 ஆம் திகதியில் உயிர் வாழ்ச்சான்றிதழ்களை இற்றைப்படுத்தாத ஓய்வூதியர்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பயன்படுத்தி, உயிர் வாழ்ச்சான்றிதழ்களை இற்றைப்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். இந்தப் படிவம் 2023.11.30 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும். எவ்வாறாயினும், மேற்கூறிய அறிவுறுத்தல் கடிதங்களின் பிரகாரம் 2023.06.30 ஆம் திகதியில் கிராம சேவையாளருக்கு வழங்கப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி அல்லது கைரேகைகளை வைப்பதன் மூலம் உயிர் வாழ்ச்சான்றிதழ்களை இற்றைப்படுத்த முடியாத ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஜூலை 2023 முதல் நிறுத்தப்படும்.

04. தனிப்பட்ட இயலாமை, நோய் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விடயங்கள் காரணமாக நிரந்தர வதிவிட கிராம சேவையாளர் பிரிவிற்கு வெளியே வசிக்கும் ஓய்வூதியர்களின் உயிர் வாழ்ச்சான்றிதழ்கள் மேற்கண்ட படிவத்தைப் பயன்படுத்தி அவர் தற்காலிகமாக வதியும் பிரிவின் கிராம சேவையாளர் மூலம் சான்றளிக்கப்பட்டு அந்தந்த பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன் ஓய்வூதியக் கோவை பராமரிக்கப்படும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அதன்படி உயிர் வாழ்ச்சான்றிதழைச் சமர்ப்பிக்கும் போது, ஓய்வூதியக் கோவைக்குரிய விடய அலுவலர், ஓய்வூதியரின் உயிர் வாழ்ச்சான்றிதழைத் தரவுத்தளத்தில் இற்றைப்படுத்த வேண்டும்.

05. கைரேகையைப் பயன்படுத்தி உயிர்வாழ்ச்சான்றிதழை இற்றைப்படுத்தும் ஓய்வூதியர்களுக்கு, உயிர்வாழ்ச்சான்றிதழை இற்றைப்படுத்தும் வசதிகள் 26 பிரதேச செயலகங்களிலும், 476 வங்கிக் கிளைகளிலும் வழங்கப்பட்டுள்ளது.

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

06. 26 பிரதேச செயலகங்கள் மற்றும் 476 வங்கிக் கிளைகளின் கைரேகையைப் பயன்படுத்தி உயிர்வாழ்ச்சான்றிதழை இற்றைப்படுத்தும் பதிவக வசதியை கீழ் உள்ளவாறு பதிவிறக்கம் செய்யமுடியும்.

www.pensions.gov.lk ⟶ Resources ⟶ Downloads ⟶ Life Certificate – 2023 through Finger Prints from 01.01.2023

07. இது தொடர்பில் தங்களது ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுதற்குரியது.

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி. டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

**இது இலவசமாக விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவம்**

**ஓய்வூதிய உயிர்வாழ்ச் சான்றிதழ் – 2023**

**(2023.05.31 ஆம் திகதிக்குள் உயிர்வாழ்ச் சான்றிதழை இற்றைப்படுத்தாத ஓய்வூதியர்களுக்கு)**

| ஓய்வூதியம் வழங்கப்படும் தொடர்புடைய பிரதேச செயலகம் | |
|---|---|

தொ.இல
(கிராம சேவகரினால் இடப்படும் இல.)

**2023.05.31 ஆம் திகதிக்குள் நீங்கள் உங்களது உயிர்வாழ்ச் சான்றிதழைப் இற்றைப்படுத்தவில்லை. இந்த படிவத்தை உங்கள் பகுதியில் உள்ள கிராம சேவகரிடம் பூர்த்தி செய்து தவறாமல் சமர்ப்பிக்கவும். இந்த படிவம் . 2023.11.30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.**

**குறிப்பு: டிஜிட்டல் உயிர்வாழ்ச் சான்றிதழ் முறையின் கீழ் உயிர்வாழ்ச் சான்றிதழை சமர்ப்பிக்கும் ஓய்வூதியர்கள் இவ் விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் 2/2020 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் டிஜிட்டல் உயிர்வாழ்ச் சான்றிதழ் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும்.**

1. முதலெழுத்துக்களுடன் பெயர்
2. தேசிய அடையாள அட்டை இல. (கட்டாயமானது)
3. பிறந்த திகதி (வருடம்/மாதம்/திகதி)
4. ஓய்வூதியம் — வகை / இலக்கம்
5. வதிவிட முகவரி
6. தொலைபேசி இல. — வதிவிடம் / கையடக்க

   கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு விபரங்களை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையினால் கையடக்க தொலைபேசி இலக்கம் கட்டாயமாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.
7. கிராம சேவகர் பிரிவு / இல.
8. ஓய்வூதியம் பாதுகாவலர் ஊடாக வழங்கப்படின் பாதுகாவலரிக் பெயர்

   8.1 அவரின் தேசிய அடையாள அட்டை இல.

   8.2 அவரின் தொலைபேசி இல. — வதிவிடம் / கையடக்க
9. விதவைகள் / தபுதாரர் ஓய்வூதியம் எனில், அவ் விதவை/ தபுதாரர் மறுமணம் செய்துள்ளார? (பொருத்தமான கூட்டினுள் (√) அடையாளத்தினை இடவும்) — ஆம் ☐ இல்லை ☐
10. அநாதை ஓய்வூதியம் எனில், அவ் அநாதை பிள்ளை தொழில் புரிகின்றாரா? (பொருத்தமான கூட்டினுள் (√) அடையாளத்தினை இடவும்) — ஆம் ☐ இல்லை ☐

**மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியாயவை என அறியத்தருகின்றேன்.**

திகதி.....................................

...................................................
ஓய்வூதியம் பெறுபவரின் கையொப்பம்

**கிராம சேவகரின் அறிக்கை**

**அவதானிப்புக்கள்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வண /குரு /திரு/ திருமதி/ செல்வி என்பவர் எனது கிராமசேவகர் பிரிவில் நிரந்தராமக/ தற்காலிகமாக வசிக்கின்றார். அவர் தனது வேலைகளை தாமே செய்துகொள்வதற்குரிய ஆரோக்கியமான/ ஆரோக்கியமற்ற நிலைமையில் உள்ளார். அவரது பெயர் வாக்காளர் இடாப்பில் உள்ளது / இல்லை.

திகதி.....................................

...................................................
கிராம சேவகரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

**மேலொப்பம் இடுதல்.**

திகதி.....................................

...................................................
பிரதேச செயலாளர் / அனுமதியளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

இவ் உயிர்வாழ்ச் சான்றிதழைக் கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்கிறார்.
(பொருத்தமான கூட்டினுள் (√) அடையாளத்தினை இடவும்) — ஓய்வூதியர் ☐ பாதுகாவலர் ☐

................................................................................ ....**இங்கே பிரித்தெடுக்கவும்**..............................................................................

**உயிர்வாழ்ச் சான்றிதழை ஏற்றுக்கொண்டமையை அறிவித்தல்**

ஓய்வூதிய இலக்கம் .............................................................
சமர்ப்பிக்கப்பட்ட ஓய்வூதிய உயிர்வாழ்ச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெற்றுக்கொண்ட திகதி.....................................

...................................................
ஓய்வூதிய விடய அலுவலர் / கிராமசேவகர் கையொப்பம்